## தமிழ்நாடு முதலமைச்சர் போல் சட்டத்தை மதிக்கக்கூடியவர் இந்தியாவிலேயே கிடையாது!

# 2014 ஆம் ஆண்டுத் தீர்ப்பின் அடிப்படையிலேயே திருப்பரங்குன்றத்தில் தீபத்தை ஏற்றவேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடு!

**சென்னை, டிச.5–**

**“திருப்பரங்குன்றத்தில் 2014 ஆம் ஆண்டு அளிக்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையிலேயே எப்போதும் தீபம் ஏற்றப்படும் இடத்திலேயே, அதே வழக்கப்படியே தற்போதும் கார்த்திகை தீபத்தை ஏற்ற வேண்டும் என்பதுதான் அரசின் நிலைப்பாடு!” என்றும் “முதலமைச்சரைப் போல் சட்டத்தை மதிக்கக்கூடிய ஒருவர் இந்தியாவிலேயே கிடையாது!” என்றும் இன்று போராடுபவர்களுக்கு அடிமையாக பழனிசாமி கிடைக்க முடியுமே தவிர, வேறு அடிமைகள் யாரும் தமிழ்நாட்டில் கிடைக்க மாட்டார்கள்! என்றும் சென்னை அண்ணா அறிவாலயத்தில் அமைச்சர் எஸ்.ரகுபதி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளிக்கையில் விளக்கமுடன் குறிப்பிட்டனர்.**

### சென்னை, அண்ணா அறிவாலயத்தில் அமைச்சர் எஸ்.ரகுபதி – கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று (04-12-2025) அமைச்சர் எஸ்.ரகுபதி, தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் திருப்பரங்குன்றம் கார்த்திகைத் தீப விவகாரம் தொடர்பாக செய்தியாளர்களை சந்தித்து அளித்த பேட்டி வருமாறு:

**தமிழ்க்கடவுள் முருகனுக்கான திருவிழா கார்த்திகை தீபம்!**

தமிழ்நாட்டில் எப்படியாவது காலூன்ற வேண்டும் எனும் நோக்கத்தோடு இருக்கும் இந்துத்துவ அமைப்புகள் எதை கையில் எடுப்பது என தெரியாமல் முழித்துக்கொண்டிருக்கிறார்கள். கார்த்திகைத் தீபத் திருவிழா என்பது தமிழ்க் கடவுள் முருகனுக்காக கொண்டாடப்படும் திருவிழாவே தவிர இந்தியாவில் இருக்க இந்துக்களுடைய பண்டிகை அல்ல; அது தமிழர்களுடைய பண்டிகை. உலகெங்கும் இருக்கக்கூடிய தமிழர்கள் கார்த்திகைத் திருவிழாவை கொண்டாடுவார்கள். இதில் இந்துத்துவாவுக்கு எந்த வேலையும் கிடையாது.

ஆனால் இப்பொழுது திடீரென்று திருப்பரங்குன்றத்தில் கார்த்திகைத் தீபத்தை ஒட்டி ஒரு பிரச்சனையை கிளப்பி இருக்கிறார்கள். நீதிமன்றத்தை அணுகி அங்கே ஒரு உத்தரவை வாங்கி இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஒன்றை மறந்துவிட்டார்கள். 2014ஆம் ஆண்டு நீதியரசர்கள் பவானி சுப்பராயன் அவர்களும் அதைப்போல நீதியரசர் கல்யாணசுந்தரம் அவர்களும் 2014ஆம் ஆண்டு ஒரு தீர்ப்பை தந்திருக்கிறார்கள்.

இன்று எந்த இடத்தில் கார்த்திகை தீபத்தை வழக்கப்படி ஏற்றிக் கொண்டிருக்கிறோமோ அதே இடத்தில் தான் ஏற்ற வேண்டும் என்று 2014லேயே தீர்ப்பு வந்திருக்கிறது. ஆனால் அதைப் புரிந்து கொள்ளாதவர்கள், அதை அறிந்து கொள்ளாதவர்கள், அதை பற்றி தெரிந்து கொள்ளாதவர்கள், ஏதோ புதிதாக ஒன்றை கண்டுபிடித்ததை போல நேற்று முன்தினம் நீதிமன்றத்தை அணுகி எங்களுக்கு கார்த்திகைத் தீப விளக்கேற்றுவதற்கு அனுமதி வேண்டும் என்று கேட்டு ஒரு இடத்தை குறிப்பிட்டு கேட்டிருக்கிறார்கள்.

அதற்கு அந்த நீதிபதியும் தீர்ப்பை தந்திருக்கிறார்.

**நாங்கள் சட்டத்தை மதிப்பவர்கள் நீதிக்கு தலை வணங்குபவர்கள்!**

> **திருப்பரங்குன்றம் மலையில் தீபம் ஏற்றும் வழக்கு! உச்சநீதிமன்றத்தில் - தமிழ்நாடு அரசு மேல்முறையீடு!**
>
> **திருப்பரங்குன்றம் மலை மீது கார்த்திகை தீபம் ஏற்றுவது குறித்த மனுவை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினை எதிர்த்து தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ளது.**
>
> **திருப்பரங்குன்றத்தில் மலை மீது கார்த்திகை தீபம் ஏற்றுவது சம்பந்தமான வழக்கில் மனுவை உயர்நீதிமன்ற தனி நீதிபதி நேற்று முன்தினம் அளித்த தீர்ப்பை எதிர்த்து தமிழ்நாடு அரசு நேற்று மேல் முறையீடு செய்தது. இதனை உயர்நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர்.**
>
> **இந்நிலையில் உயர்நீதிமன்ற தனி நீதிபதி அளித்த தீர்ப்பினை எதிர்த்து தமிழ்நாடு அரசு நேற்று (4.12–2025) மேல் முறையீடு மனுவை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.**

நாங்கள் சட்டத்தை மதிப்பவர்கள், நீதிக்கு தலை வணங்குபவர்கள், எங்களுடைய தமிழ்நாடு முதலமைச்சரை போல் சட்டத்தை மதிக்கக்கூடிய ஒருவர் இந்தியாவிலேயே கிடையாது. அந்த அளவுக்கு சட்டத்துக்கு மரியாதை கொடுப்பவர் முதலமைச்சர்; சட்டத்தின் ஆட்சி தமிழ்நாட்டில் நடக்க வேண்டும் என்று விரும்புகின்றவர்.

எனவே 2014-இல் இரண்டு நீதிபதிகள் ஃபுல் பெஞ்ச் அதாவது டிவிஷன் பெஞ்ச் கொடுத்திருக்கக்கூடியது அந்த தீர்ப்பு; அந்த தீர்ப்பை ‘Set aside’ பண்ணாமலோ அல்லது அந்த தீர்ப்பின் மீது மேல்முறையீடு இல்லாமலோ புதிதாக ஒரு தனி நீதிபதியை வைத்து ஒரு தீர்ப்பை வாங்கி கொண்டு வந்து நாங்கள் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டால் எப்படி நிறைவேற்ற அனுமதிக்க முடியும்?

அப்படி அனுமதித்தால் தமிழ்நாடு அரசின் மீது என்ன குற்றச்சாட்டு வரும் என்பது உங்களுக்கு தெரியும். எனவே 2014 தீர்ப்பின் படி நாங்கள் நடந்து கொண்டிருக்கிறோம்.

இன்று போராடுகிறவர்கள் 2014 நீதிமன்ற தீர்ப்பை மறந்துவிட்டு பேசுகிறார்கள். நீதிமன்ற தீர்ப்பை மதிக்காதவர்கள் அவர்கள்தான். இன்றைக்கு யார் யாரெல்லாம் அப்படி பேசுகிறார்களோ அவர்கள் மீது 2014 தீர்ப்பினுடைய அடிப்படையிலே எந்த வழக்கையும் தொடர்வதற்கு தமிழக அரசுக்கு உரிமை உண்டு. ஆனால் 2014 தீர்ப்பை படித்து பார்க்காமல் அப்படி ஒரு தீர்ப்பு இருக்கிறதே என்பதே கூட தெரியாமல் அல்லது நீதிமன்றத்தில் அதை மறைத்து விட்டு புதிதாக ஒரு கதையை கட்டிவிட்டு போனால் அதை மக்கள் நம்புவார்களா? தமிழ்நாட்டு மக்கள் இளிச்சவாயர்கள் அல்ல. ஏமாளிகள் அல்ல.

### இந்துத்துவாவின் கைக்கூலிகளுக்கு அடிமையாக இருக்கும் எடப்பாடி பழனிசாமி!

அவர்களுக்கு வேண்டுமென்றால் அடிமை பழனிச்சாமி கிடைக்க முடியுமே தவிர வேறு எந்த அடிமைகளும் தமிழ்நாட்டில் கிடைக்க மாட்டார்கள்.

**மதநல்லிணக்க பூமி தமிழ்நாடுதான்!**

மத ஒற்றுமை, மத நல்லிணக்கம் இவற்றுக்கு எடுத்துக்காட்டான பூமி இந்தியாவிலேயே தமிழ்நாடுதான்; அதை இன்றைக்கும் நாம் நிரூபித்துக் கொண்டிருக்கின்றோம்.

மேல்முறையீட்டை தள்ளுபடி செய்தால் அதுக்கு மேல் என்ன இருக்கிறதோ அதை பற்றி சட்டத்துறையின் மூலமாக ஆராய்ந்து நடவடிக்கைகளை எடுக்கப்படும்.

இந்துத்துவானுடைய கைக்கூலிகளுக்கு அடிமையாக இருக்கிறார் எடப்பாடி பழனிச்சாமி!

எடப்பாடி பழனிச்சாமிக்கு வேறு வேலையே கிடையாது. தமிழ்நாடு அரசு மீது ஏதாவது குற்றச்சாட்டை சொல்ல வேண்டும் என்பது ஒன்றுதான் அவருடைய வேலை.

இந்த சம்பவத்தையும் அவர் எடுத்துக் கொண்டு இதில் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழ்நாடு அரசுக்கு ஆதரவாக நிற்க வேண்டியவர் இந்துத்துவாவினுடைய கைக்கூலிகளுக்கு அடிமையாக இருந்திருக்கிறார் என்பதை இதன் மூலமாக நிரூபித்திருக்கின்றார்.

தமிழ்நாட்டை பொறுத்தவரைக்கும் எல்லாரும் ஒன்று, இந்த தீர்ப்பை பொறுத்தவரை 2014ல் அவர்கள் பெரிதும் போற்றிக் கொண்டுள்ளார்களே, அம்மா அம்மா என்று உச்சரிக்கிறார்களே அந்த அம்மையார் ஆட்சியில் இருந்தபோது வந்த தீர்ப்பு தான், ஆக அந்த அம்மையாரை விட எடப்பாடி பெரிய அறிவாளி என்று அவருடைய கட்சிக்காரர்கள் ஏற்றுக்கொண்டால் அதற்கு நாங்கள் குறுக்கே நிற்க தயாராக இல்லை.

ஜெயலலிதா அவர்கள் ஆட்சி இருக்கிற போதுதான் இந்த தீர்ப்பு வந்தது. அப்படி இந்த தீர்ப்பு சரியில்லை என்று சொன்னால் அந்த அம்மையாரே அப்பொழுது மேல் முறையீடு சென்றிருப்பார். அந்த அம்மையார் காலத்தில் போடப்பட்ட ஒரு தீர்ப்பு அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்ப்புக்கு தொடர்பாக இருப்பதினால்தான் இந்த நடவடிக்கை.

**அடிமைச் சாசனம் எழுதிக் கொடுத்த பழனிச்சாமி!**

அ.தி.மு.க. ஆட்சியில் இந்த இடத்தில் தான் இன்றைக்கு வழக்கப்படி ஏற்றப்படுகிற அதே இடத்தில் தான் ஏற்றப்பட வேண்டும் என்று அன்றைக்கு நீதிமன்றத்தில் வாதாடி இருக்கிறார்கள்.

இன்றைக்கு முழுவதும் தன்னை அடிமை சாசனம் எழுதிக் கொடுத்துவிட்ட காரணத்தால் தன்னை முழுவதுமாக மறந்துவிட்டு தான் முழு அடிமை என்பதை இந்த சம்பவத்தின் மூலம் அவர் நிரூபித்திருக்கின்றார். அண்ணா திமுக தொண்டர்கள் வெட்கப்பட வேண்டும்.

CISF குறித்த கேள்விக்கு “எங்களை பொறுத்தவரை தமிழ்நாடு காவல்துறை சிறப்பாக செயல்படுகிறது. சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டுமோ அந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றோம். அதை மீறி எந்த சக்தி வந்தாலும் அந்த சக்தியை எதிர்கொள்கிற சக்தி எங்களுக்கு இருக்கிறது.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் பேட்டியளித்தனர்.

---

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

## “அன்னம் தரும் அமுத கரங்கள் திட்டம்”!

### 06.12.25 முதல் 18.12.25 வரை நடைபெறும் இடங்களின் விவரம்! மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை,டிச.5-

“அன்னம் தரும் அமுத கரங்கள்” கீழ்கண்ட நாட்களில் நடைபெறும் விவரம் பின்வருமாறு:

***நாள் 6.12.25 சனிக்கிழமை 290 ஆம் நாள்***

அம்பத்தூர் வடக்கு பகுதி

1) வட்டம் 86, முத்துமாரியம்மன் கோயில் அருகில், குப்பம், வட்ட செயலாளர்- M.கமல்.MC

2) வட்டம் 85, அம்பேத்கர் தெரு, ஆசிரியர் காலனி, வட்ட செயலாளர்-த. கண்ணபிரான்

***நாள் 7.12.25 ஞாயிற்றுக்கிழமை 291 ஆம் நாள்***

திரு.வி.க நகர் தெற்கு பகுதி

1) வட்டம் 76அ, கந்தசாமி கோயில் அருகில், குயப் பேட்டை,

வட்ட செயலாளர்-எஸ். வெங்கடேசன்

2) வட்டம் 73அ, பார்த்தசாரதி தெரு பொன்னப்பன் தெரு சந்திப்பு, புளியந்தோப்பு

வட்ட செயலாளர்- பொல்லு (எ) டி. சுரேஷ்குமார்.

***நாள் 8.12.25 திங்கட்கிழமை 292 ஆம் நாள்***

வில்லிவாக்கம் மேற்கு பகுதி

1) வட்டம் 104 ஆ, நாவலர் நகர், அண்ணா நகர் மேற்கு, வட்ட பொறுப்பாளர்- K.S பாபு

2) வட்டம் 104, 11வது பிரதான சாலை, அண்ணாநகர் மேற்கு,

வட்ட செயலாளர்- சொ. முருகேசன்

***நாள் 9.12.25 செவ்வாய்க்கிழமை 293 ஆம் நாள்***

அம்பத்தூர் தெற்கு பகுதி

1) வட்டம் 87, வன்னியர் தெரு, வட்ட செயலாளர்- த. பிரகாஷ் குமார்



2) வட்டம் 89, இளங்கோ நகர், பூங்கா டிவிஎஸ் காலனி, மாமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில், வட்ட செயலாளர்- M.E சேகர் MC

***நாள் 10.12.25 புதன்கிழமை 294 ஆம் நாள்***

திரு.வி.க நகர் வடக்கு பகுதி

1) வட்டம் 71அ, B.S மூர்த்தி நகர், (ஆடு தொட்டி எதிரில்),

வட்ட செயலாளர் -மா. ருத்திரமூர்த்தி

2) வட்டம் 71, சாஸ்திரி நகர், குளக்கரை சாலை, வட்ட செயலாளர் -எஸ் .புஷ்பராஜ்

***நாள் 11.12.25 வியாழக்கிழமை 295 ஆம் நாள்***

எழும்பூர் வடக்கு பகுதி

1) வட்டம் 77, டிம்லாஸ் ரோடு, போலீஸ் ஸ்டேஷன் அருகில், வட்ட செயலாளர்- தி.தயாளன்

2) வட்டம் 78, ஐந்து விளக்கு, கொசப்பேட்டை, வட்ட செயலாளர்-சு.மனோகர்

***நாள் 12.12.25 வெள்ளிக்கிழமை 296 ஆம் நாள்***

அம்பத்தூர் கிழக்கு பகுதி

1) வட்டம் 83அ, RK லிங்க் சாலை, தாதம்குப்பம், வில்லிவாக்கம், வட்ட செயலாளர் -சு. மோகன்குமார்

2) வட்டம் 83, வினாயகர் கோவில் அருகில், சிவலிங்கபுரம், கொரட்டூர், அக்கிரஹாரம், வட்ட செயலாளர்- சீ.லோகநாதன்

***நாள் 13.12.25 சனிக்கிழமை 297 ஆம் நாள்***

கொளத்தூர் கிழக்கு பகுதி

1) வட்டம் 66அ, காமராஜர் நகர், காந்தி நகர் சந்திப்பு, திரு.வி.க நகர் பஸ் நிலையம் எதிரில், வட்ட செயலாளர்- P. ஊமைதுரை

2) வட்டம் 67, சுப்ரமணிய தோட்டம், பெரம்பூர், வட்ட செயலாளர்- N. பொன்முடி

***நாள் 14.12.25 ஞாயிற்றுக்கிழமை 298 ஆம் நாள்***

எழும்பூர் தெற்கு பகுதி

1) வட்டம் 108, அப்பாராவ் கார்டன், வட்ட செயலாளர்- K.S வான்மதி கதிரவன்

2) வட்டம் 108அ, அம்பேத்கர் திடல், சேத்துப்பட்டு, வட்ட செயலாளர்-L. சுந்தர்ராஜன் MC

***நாள் 15.12.25 திங்கட்கிழமை 299 ஆம் நாள்***

துறைமுகம் தொகுதி

1) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 60 அ, அன்னை சத்யா நகர், B.C பகுதி

வட்ட செயலாளர்- ஆ.நா. பார்த்திபன்

2) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம் 54அ, உட் வார்ப், 1வது கேட், வால் டாக்ஸ் ரோடு,

வட்ட செயலாளர் - பா.கதிரவன்

***நாள் 16.12.25 செவ்வாய்க்கிழமை 300 ஆம் நாள்***

கொளத்தூர் மேற்கு பகுதி

1) வட்டம் 65, கிழக்குத் தெரு, கொளத்தூர், வட்ட செயலாளர்- N. சௌந்தர்

2) வட்டம் 65 அ, ஜெயராம் நகர், வட்ட செயலாளர்- N. பவுல்ராஜ்

***நாள் 17.12.25 புதன்கிழமை 301 ஆவது நாள்***

வில்லிவாக்கம் கிழக்கு பகுதி

1) வட்டம் 98 ஆ, கே.கே நகர், இரண்டாவது தெரு, மசூதி பின்புறம்

வட்ட செயலாளர் -காஞ்சி. செ. துரை

2) வட்டம் 96, 4வது புது தெரு, அயனாவரம் வட்ட செயலாளர் -வேதா

***நாள் 18.12.25 வியாழக்கிழமை 302 ஆம் நாள்***

துறைமுகம் தொகுதி

1) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 56, பிடாரியார் கோயில் தெரு,

சைவம் முத்தையா சந்து, பிராட்வே, வட்ட செயலாளர் -த. கதிரவன் (எ) ராஜா.

2) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம் 59, வால் டாக்ஸ் ரோடு (சென்ட்ரல் அருகில்)

வட்ட செயலாளர் - டி.சத்தீஷ்குமார்

மேற்கண்ட காலை உணவு வழங்கும் நிகழ்ச்சியில் திட்ட ஒருங்கிணைப்பாளர்களாக சொ.வேலு, எஸ்.முரளி, ஆர். ராஜன், கே.ஆர்.அபராஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல். சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார் செயல்படுவார்கள்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர் பாபு அறிவித்துள்ளார்.

---

### திருப்பெரும்புதூர் பிள்ளைப்பாக்கம் சிப்காட்டில் ரூ. 200 கோடி முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ள

## பிக்டெக் தொழிற்சாலையை திறந்து வைக்க இன்று வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

### கழகத்தினர் திரண்டு வந்து பங்கேற்கும்படி அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

திருப்பெரும்புதூர். டிச.5-

திருப்பெரும்புதூர் பிள்ளைப்பாக்கம் சிப்காட்டில் ரூ.200 கோடி முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ள பிக்டெக் தொழிற்சாலையை திறந்து வைக்க இன்று 5-ஆம் தேதி காலை வருகை தரும் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எதிரில், இன்று காலை 8.30 மணியளவில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தினர் திரண்டு வந்து, மாபெரும் வரவேற்பு அளித்திட வேண்டும் என்று மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:-

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், பிள்ளைப்பாக்கம் சிப்காட்டில் ரூ. 200 கோடி முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ள பிக்டெக் என்ற தொழிற்சாலை அமைத்துள்ளது. இப்புதிய தொழிற்சாலை திறப்பு விழா இன்று 5-ஆம் தேதி காலை 9.30 மணியளவில் நடைபெறுகிறது.

கழகத் தலைவர் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் வருகை தந்து இப்புதிய தொழிற்சாலையை திறந்து வைக்கிறார்.

இந்த தொழிற்சாலையை திறந்து வைக்க வருகை தரும் மாண்புமிகு தமிழக முதல்வர் - தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இன்று 5-ஆம் தேதி காலை 8.30 மணியளவில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில், மேள-தாளம், பேண்டு வாத்தியம் முழங்க பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வரவேற்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட - மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் - கழக நிர்வாகிகள் - தலைமை செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என்று மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

சரித்திர சாதனை படைத்து வரும் நம்முடைய ஒப்பற்ற தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வரவேற்பு அளிப்பது, “நமது கடமை”, “நமது உரிமை” என்ற அந்த உணர்வோடு மாவட்டம் முழுவதிலிருந்து கழகத்தினர் அலைகடலென திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என்று இரு கரம் கூப்பி அழைக்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.